# புத்தரும் ஏழைச் சிறுவனும்

# 15

[அரண்மனையில் இருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழிநடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக்கண்ட ஓர் இடைச் சிறுவன், தான் தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் என்று கருதி தனது பாத்திரத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது.]

**சிறுவன் புத்தரைக் காணுதல்**

ஆடுகள் மேய்த்துவரும் - ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்,
வாடிக் கிடந்தவனைச் - செல்லும்
வழியின் மீது கண்டான்.

**அவன் செயல்**

வையகம் வாழ்ந்திடவே - பிறந்த
மாதவச் செல்வன் முகம்
வெய்யிலில் வெந்திடாமல் - தழைகள்
வெட்டி அருகில் நட்டான்.

தெய்வ குலத்திவனை - எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே - சிறிது
சிந்தை தயங்கி நின்றான்.

உள்ளந் தெளிந்துடனே - வெள்ளாடு
ஒன்றை அழைத்து வந்து,
வள்ளல் மயக்கொழிய - மடுவை
வாயில் கறந்து விட்டான்.



நட்ட தழைகளெல்லாம் - வளைந்து
நாற்புறமும் கவிந்து,
கட்டிய மாளிகைபோல் - வனத்தில்
காட்சி யளித்தத ம்மா!

பூவோடு காய்கனியும் - தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே,
மேவு பலமணிகள் - இழைத்த
விதானமும் ஆனதம்மா!

ஐயனை இவ்வுலகம் - காணுதற்கு
அரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுது நின்றான் - சிறுவன்
களங்க மிலாவுளத்தான்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற் கிடந்த ஐயன் - மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
“கலத்தினி லேகொஞ்சம் - பாலைக்
கறந்து தருவாய்” என்றான்.

### சிறுவன் மறுத்தல்

“ஐயையோ! ஆகாது”
என்றான் - சிறுவன்
“அண்ணலே! யானும் உனைக்
கையினால் தீண்டவொண்ணா - இடையன் ஓர்
“காட்டு மனிதன்” என்றான்.

### புத்தர் அறிவுறுத்தல்

உலகம் புகழ் பெரியோன் - இந்த
உரையினைக் கேட்டு அந்நாள்
அலகில் கருணையினால் - சொன்ன
அமுத மொழிஇதுவாம்:

“இடர் வரும்போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர்போல் - மாந்தர்
உறவு கொள்வர், அப்பா!

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவ துண்டோ அப்பா?

எவர் உடம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழி நீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா!

நெற்றியில் நீறும் - மார்பில்
 நீண்ட பூனூலும்
பெற்று இவ் உலகுதனில் - எவரும்
 பிறந்ததுண்டோ அப்பா?

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டும் அப்பா!

நன்மை செய்பவரே - உலகம்
 நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே - அண்டித்
 தீண்ட ஒண்ணாதார்".

## சிறுவன் பால் தருதல்

நிலத்து உயர் ஞானி - இவை
 நிகழ்த்தி, "என்தம்பீ!
கலத்தினிலே கொஞ்சம் - பாலைக்
 கறந்து தா" என்றான்.

ஆயர் சிறுவனும் - கலத்தில்
 அளிக்க வாங்கியுண்டு,
தாயினும் இனியன் - கொண்ட
 தளர்ச்சி நீங்கினனே.



**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| ஜோதி | - | ஒளி(ப்பிளம்பு) |
| ஆயர் | - | இடையர் (ஆடு, மாடு மேய்க்கும் தொழில் செய்பவர்) |
| குலம் | - | இனம் / வம்சம் |
| தழைகள் | - | சிறு குச்சியோடு கூடிய இலைக் கொத்து |
| வையகம் | - | உலகம் |
| தீண்டல் | - | தொடுதல் |
| வள்ளல் | - | கேட்பவர்களுக்கு இல்லை என்று கூறாமல் கேட்ட பொருள் தருபவர். |
| வனம் | - | காடு / கானகம் |
| கவிந்து | - | கீழ் நோக்கிச் சாய்ந்து |
| கனி | - | பழம் |
| தளிர் | - | புதிதாகத் தளிர்ந்திருக்கும் மென்மையான இளம் இலை |
| விதானம் | - | நான்கு கம்பங்கள் கொண்ட அமைப்பில் மேலே கட்டியிருக்கும் அலங்காரமான பட்டுத்துணி. |
| களங்கமிலாத | - | கெட்ட எண்ணம் இல்லாத / குற்றமில்லாத |
| கலம் | - | பாத்திரம் |
| அண்ணல் | - | வணக்கத்திற்கு உரியவர் / தலைவர் / பெருமையின் சிறந்தோர் |
| இரங்குதல் | - | வருந்துதல் |
| மாந்தர் | - | மக்கள் |
| உதிரம் | - | இரத்தம் |
| உவர்ப்பு | - | உப்பின் கரிப்பு |
| மேற்குலத்தார் | - | உயர் வம்சத்தவர் |

## கிரகித்தற் பயிற்சி

1. *வழி மீது வாடிக்கிடந்த புத்த பெருமானைக் கண்டவன் யார்?*
2. *புத்தமா முனிவனின் மீது வெய்யில் படாமல் இருக்க சிறுவன் செய்த செயல் என்ன?*
3. *சிறுவன் சிந்தை தயங்கியமைக்கான காரணம் யாது?*
4. *வள்ளலான புத்தபெருமானின் மயக்கம் தெளியச் சிறுவன் செய்த செயல் என்ன?*
5. *ஐயையோ ஆகாது அண்ணலே! யானும் உனைக் கையினால் தீண்டவொண்ணாதவன் என்று சிறுவன் கூறியதற்குப் புத்த பெருமான் கூறிய பதிலை தொகுத்துக் கூறுக.*
6. *தீண்டாமை ஒழிக்கப்படவேண்டியதன் அவசியத்தை விளக்கி எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1: புத்தபெருமானைப் போல் பாவனை செய்து உச்சரிப்பு தெளிவு, தொனி, முகபாவம், மெய்ப்பாடு முதலியன தோன்ற உமது நண்பனிடம் பேசிக் காட்டுக.

செயற்பாடு 2: குழுவாகச் செயற்பட்டு புத்தரும் ஏழைச்சிறுவனும் என்ற கதைப்பாடலை வாசித்து, கிரகித்து கதையாக எழுதுக. பொருத்தமான தலைப்பிடுக.

செயற்பாடு 3: பாடற் பகுதியில் கூறப்பட்டுள்ள விழுமியங்கள், படிப்பினைகள் முதலியவற்றை உமது குழுவினருடன் கலந்துரையாடி எழுதுக.

செயற்பாடு 4: புத்த பெருமானின் வாழ்க்கை வரலாறு பற்றி தேடியறிந்து ஒப்படை தயாரிக்குக.

## மொழிவளம்

### ▶ உவமைத் தொடர்

**பின்வரும் பாடலைக் கவனிப்போம்.**

மயில் போலப் பொண்ணு ஒண்ணு
கிளி போலப் பேச்சு ஒண்ணு
குயில் போலப் பாட்டு ஒண்ணு
கேட்டு நின்னு மனசு போன இடம் தெரியல...

இப்பாடலில் இடம் பெறும் மயில் போல, குயில் போல, கிளி போல ஆகியன உவமைத் தொடர்களாகும். சொல்ல முற்படும் கருத்தை அழகாகவும் தெளிவாகவும் விளங்க வைப்பதற்கு உவமைத்தொடர்கள் உதவுகின்றன.

1. அணை கடந்த வெள்ளம் போல
2. இணை பிரிந்த மான் போல
3. எலியும் பூனையும் போல
4. உயிரும் உடலும் போல
5. ஊமை கண்ட கனவு போல
6. கிணற்றுத் தவளை போல

### பயிற்சி

1. உவமைத்தொடர்கள் சிலவற்றைத் தொகுத்து எழுதுங்கள்.
2. நீங்கள் விளங்கிக்கொண்ட உவமைத்தொடர்கள் ஐந்தை வாக்கியங்களில் அமைத்து எழுதுங்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# இலக்கணம்

## ▶வினைச் சொற்கள்

பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்.

1. பிரியதர்சினி பாடினாள்.
2. தயாளன் பாடுகிறான்.
3. கமலா பாடுவாள்.

பாடினாள், பாடுகிறான், பாடுவாள் ஆகியன வினைச் சொற்களாகும்.

இவை பாடுதல் என்ற செயலை விளக்குகின்றன.

இவை இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய காலங்களை முறையே காட்டுகின்றன.

இவை வேற்றுமை உருபை ஏற்காது. ஆகவே ஒரு செயலை உணர்த்தி, காலம் காட்டுதல், வேற்றுமை உருபை ஏற்காமை ஆகிய பண்புகளுடன் வரும் சொல்லை வினைச்சொல் என்பர்.

## இறந்த காலம் காட்டும் வினைச் சொற்கள்

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ நேற்று வந்தான்.
- ★ நாங்கள் கண்டோம்.
- ★ நீ ஓடினாய்.
- ★ அவள் பார்த்தாள்.
- ★ மாணவர்கள் வந்தனர்.

இந்த வசனங்களில் வரும் வினைச் சொற்கள் **ஒரு செயல் நடந்து முடிந்ததைக்** காட்டுகின்றன. எனவே இச்சொற்களை இறந்த காலம் காட்டும் வினைச் சொற்கள் என்பர்.

## நிகழ் காலம் காட்டும் வினைச் சொற்கள்

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ குமார் இப்போது வருகின்றான்.
- ★ நாங்கள் நிலவை இரசிக்கின்றோம்.
- ★ நீ எங்கே ஓடுகின்றாய்.
- ★ பரீதா படம் பார்க்கின்றாள்.
- ★ மாணவர்கள் வருகின்றனர்.

இந்த வசனங்களில் வரும் வினைச் சொற்கள் **ஒரு செயல் நடைபெற்றுக் கொண்டிருப்பதனை** காட்டுகின்றன. எனவே இச்சொற்களை நிகழ் காலம் காட்டும் வினைச் சொற்கள் என்போம்.

### எதிர் காலம் காட்டும் வினைச் சொற்கள்

- ★ தம்பி நாளை வருவான்.
- ★ நாங்கள் ஓவியத்தை இரசிப்போம்.
- ★ நீ நன்றாக ஓடுவாய்
- ★ கல்யாணி படம் பார்ப்பாள்.
- ★ மாணவர்கள் வருவார்கள்.

இந்த வசனங்களில் வரும் வினைச் சொற்கள் ஒரு செயல் நடை பெற இருப்பதனைக் காட்டுகின்றன. ஒரு செயல் நிகழ இருப்பதைக் காட்டும் வினைச் சொற்களை எதிர் காலம் காட்டும் வினைச் சொற்கள் என்போம்.

## பயிற்சி

**1) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| | இறந்த காலம் | நிகழ் காலம் | எதிர் காலம் |
|---|---|---|---|
| 1. | சொன்னேன் | சொல்கிறேன் | சொல்வேன் |
| 2. | கற்றேன் | ................ | ................ |
| 3. | ................ | ................ | வருவோம் |
| 4. | ................ | ................ | எடுப்பான் |
| 5. | ................ | ஓடுகின்றது | ................ |
| 6. | பறந்தன | ................ | ................ |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக